பக்கங்கள்: ஆறு

யாழ்ப்பாணம்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 புரட்டாதி 27 செவ்வாய்க்கிழமை (13-10-1992) UTHAYAN – A Lively National Tamil Daily கதிர் 320

# விமானப்படை தளபதி ராஜினாமாச் செய்வார்?

## முப்படைத் தலைமைப்பீடத்தில் உள்வீட்டுப் பூசல் முற்றுகிறது

கொழும்பு, அக்டோபர் 13

ஸ்ரீலங்காவின் முப்படைகள் மற்றும் பொலிஸ் பகுதியின் தலைமைப் பீடத்தில் உள்வீட்டுச் சண்டை நெருக்கடியான கட்டத்தை அடைந்திருக்கிறது. இதனால் விமானப்படைத் தளபதி எயார் வைஸ் மார்ஷல் டெரன்ஸ் குணவர்த்தனா இன்னும் ஓரிரு தினங்களில் இராஜினாமாச் செய்வார் எனக் கூறப்படுகிறது.

முன்னாள் விமானப் படைத் தளபதி ஏயார் வைஸ்மார்ஷல் ஹரி குணதிலக்க பி. பி. ஸிக்கு அளித்த பேட்டியில் இவ்விவரம் வெளியாகியிருக்கிறது. முப்படைத் தளபதிகளிடமும் பொலிஸ் மா அதிபரிட

(6 ஆம் பக்கம் பார்க்க)

## காரைநகர் முகாமிலிருந்து ஷெல் தாக்கு!

சுழிபுரம், அக். 13

நேற்றுக் காலையும் பின்னர் நண்பகலிலும் காரைநகர் முகாமிலிருந்து படையினர் பொன்னாலைப் பகுதியை நோக்கி ஷெல், பீரங்கித் தாக்குதல்களை நடத்தினர். பத்துக்கு மேற்பட்ட ஷெல்கள் பொன்னாலை, மூளாய், சுழிபுரம், திருவடிநிலை, நெல்லியான், நீத்தவன் பகுதி வயல்வெளிகளில் வீழ்ந்து வெடித்தன. (உ-28)

ஸ்ரீலங்கா கடற்படையினரால்

## பருத்தித்துறை மீனவர்கள் நையப்புடைக்கப்பட்டனர்

பருத்தித்துறை கடற் பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களை நோக்கி படையினர் கடற்படைப் படகிலிருந்து வேட்டுக்களைத் தீர்த்தனர். இரண்டு மீனவர்களைப் பிடித்து நையப்புடைத்த பின்னர் கடலில் தூக்கி வீசினர்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 7.30 மணியளவில் இடம் பெற்றது.

சுமார் அரை மணி நேரம் படையினர் தாக்குதலை நடத்தினர்.

துரைராஜா (வயது 28), பேரின்பநாயகம் (வயது 45) ஆகிய இருவருமே படையினரால் பிடிக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டவர்கள் ஆவர். அவர்கள் பின்னர் நீந்திக் கரை சேர்ந்தனர்.

அவர்களின் படகுகள், வலைகள் மற்றும் மீன்பிடி உபகரணங்கள் ஆகியவை சேதமாக்கப்பட்ட நிலையில் கடலில் கைவிடப்பட்டிருந்தன. பின்னர் அவை மீட்கப்பட்டன. (உ-165)

## யாழ். பல்கலைக் கழகத்துக்கு மொத்தம் 902 மாணவர் தெரிவு

### மாத முடிவிற்குள் பெயர் பதியவேண்டும்

யாழ்ப்பாணம், அக். 13

1991 - 92 கல்வியாண்டில் பயில்வதற்கு யாழ். பல்கலைக் கழகத்திற்கு மொத்தம் 902 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் மருத்துவ பீடத்துக்கு 105 மாணவர்களும், உயிரியல் விஞ்ஞானத்துக்கு 93 மாணவர்களும், பௌதிக விஞ்ஞானத்துக்கு 182 மாணவர்களும், முகாமைத்துவத் துறைக்கு 87 மாணவர்களும், வர்த்தகத் துறைக்கு 115 மாணவர்களும், கலைப்பீடத்துக்கு 280 மாணவர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

யாழ். பல்கலைக் கழகத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ள மாணவர்கள் விபரங்கள் பல்கலைக் கழக மானிய ஆணைக் குழுவினால் அனுப்பி வைக்கப்பட்டு நேற்று இங்கு வந்து சேர்ந்தன.

அனுமதி பெற்ற மாணவர்களின் பெயர்ப் பட்டியலை யாழ். பல்கலைக் கழகத்தில் பார்வையிடலாம்.

அனுமதி தொடர்பான

(5 ஆம் பக்கம் பார்க்க)

யாழ். ஆஸ்பத்திரியிலிருந்த

## 3 நோயாளர்கள் நேற்று விமானத்தில் கொழும்புக்கு!

யாழ்ப்பாணம், அக். 13

யாழ். ஆஸ்பத்திரியில் உயிருக்காகப் போராடிக்கொண்டிருந்த இளம் பெண் டாக்டர் ஒருவரும் மற்றும் இரு நோயாளிகளும் நேற்று விமானம் மூலம் கொழும்புக்குக் கூட்டிச் செல்லப்பட்டனர்.

பருத்தித்துறை, இறங்கு துறையூடாக 'குமாரி' கப்பலுக்கு அழைத்துச் செல்லப்பட்ட இவர்கள், கப்பல் மூலம் காங்கேசன்துறை துறைமுகத்தில் போய் இறங்கினர். இதற்கான ஏற்பாடுகளை செஞ்சிலுவை சங்க சர்வதேசக் குழுவினர் மேற்கொண்டனர்.

காங்கேசன்துறையிலிருந்து பலாலிக்கு கூட்டிச் செல்லப்பட்ட நோயாளிகள் மூவரும் அங்கிருந்து விமானத்தில் ஏற்றப்பட்டு கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். (உ-162-165)

ஆலையடிவேம்பில்

## பட்டினிச் சாவின் விளிம்பில் சுமார் எண்ணூறு தமிழர்!

யாழ்ப்பாணம், அக். 13

அக்கரைப்பற்று, ஆலையடி வேம்பு தமிழ்க் கிராமத்தில் சுமார் 800 தமிழர்கள் பட்டினிச் சாவை எதிர்நோக்கிக் கொண்டிருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர்கள் விவசாயக் கூலித் தொழில் செய்து வந்தவர்களே என்று அறிவிக்கப்படுகிறது. இப்பகுதியில் சுமார் 1,500 ஏக்கர் நிலம் கடந்த பல மாதங்களாக செய்கை பண்ணப்படாமல் கிடக்கிறது. அவற்றில் விவசாயக் கூலித் தொழில் செய்தவர்கள் உழைப்பின்றி உள்ளார்கள். அவர்களுக்கு எவ்வித நிவாரணமும் வழங்கப்படாததால் அவர்கள் பட்டினிச் சாவை எதிர்நோக்குகிறார்கள்.

இதேபோல இராணுவ நடவடிக்கைகள் காரணமாக கடலுக்குச் செல்ல முடியாத சுமார் 500 மீனவர்களும் தமது அன்றாட வாழ்க்கையைச் செலுத்த முடியாது கஷ்டப்படுகின்றனர்.

இப்பிரதேசங்களில் நிவாரணம் வழங்குவதில் தமிழ் மக்கள் பெரிதும் புறக்கணிக்கப்படுவதாகவும் அறிவிக்கப்படுகிறது. (அ-30)

## மடு முகாமில் இடநெருக்கடி

யாழ்ப்பாணம், அக். 13

மடு அகதி முகாமில் அகதிகள் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் இடநெருக்கடி ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மடு அகதி முகாமில் தற்போது 29 ஆயிரத்துக்கும் அதிக மக்கள் தங்கியுள்ளனர்.

அண்மையில் மன்னாரில் படையினர் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகளினாலும்—

தற்போது பெய்து வரும் மழையினாலும் முகாமுக்கு வரும் அகதிகள் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்பட்டது. (உ-10)

## பிராந்திய சட்டசபையின் கீழ் இரண்டு மாகாண சபைகள்

### மங்கள முனசிங்காவின் புதிய திட்டம்

கொழும்பு, அக். 13

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு புதிய திட்டம் ஒன்றை தெரிவுக் குழுவின் தலைவர் திரு. மங்கள முனசிங்கா முன்வைத்திருக்கிறார்.

வடக்கு - கிழக்குக்குப் பொதுவான பிராந்திய சட்டசபையையும், அதன் கீழ் இயங்கக் கூடியதான இரண்டு மாகாண சபைகளையும் நிறுவுவதே திரு. முனசிங்காவின் திட்டமாகும்.

பிராந்திய சட்டசபைக்கு சட்டங்களை இயற்றவும், நடைமுறைப்படுத்தவும் அதிகாரம் இருக்கும். மாகாண சபைகளுக்கு சட்டங்களை அமுல் செய்யும் அதிகாரம் மட்டுமே இருக்கும்.

திரு. மங்கள முனசிங்காவின் இந்தப் புதிய திட்டம் குறித்து கடந்த புதன்கிழமை கட்சிப் பிரதிநிதிகள் கூடி ஆராய்ந்தனர். எனினும் பிரஸ்தாப திட்டம் இன்னும் தெரிவுக்குழுவிடம் உத்தியோகபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படவில்லை.

தமது திட்டத்துக்குச் சம

(2 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ மீட்பு நிதி நாளை நல்லூரில் சேகரிப்பு

யாழ்ப்பாணம், அக். 13

தமிழீழ மீட்பு நிதி சேகரிக்கும் பணி நாளை முதல் உதவி அரசாங்க அதிபர் பிரிவு மட்டத்தில் ஆரம்பமாகிறது.

நாளை புதன்கிழமை நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த மக்களிடம் தமிழீழ மீட்பு நிதி சேகரிக்கப்படும். யாழ். இந்து மகளிர் கல்லூரியில், பிற்பகல் 2 மணி தொடக்கம் 5 மணி வரை நல்லூர்ப் பகுதி மக்கள் தமது தமிழீழ மீட்பு நிதியைச் செலுத்தலாம் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தமிழீழ மீட்பு நிதிப் பொறுப்பாளர் திரு. [illegible] தெரிவித்தார். (அ)

## ராவ் பதவியேற்ற பின்னர் இந்திய உறவில் முன்னேற்றம்

### பிரேமா பெருமிதம்

கொழும்பு, அக். 13

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே நல்ல புரிந்துணர்வு ஏற்பட்டுள்ளது. பிரதமராக நரசிம்மராவ் பதவி ஏற்றதன் பின்னர் இரு நாடுகளுக்கும் இடையே மேலும் நட்புறவு இறுக்கமடைந்து வந்துள்ளது.

ஜனாதிபதி பிரேமதாஸ, ஆனைமடுப் பகுதியில் ஆடை தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை நேற்றுத் திறந்து வைத்துப் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இரு நாடுகளின் தலைவர்களும் வெளியிட்ட கூட்டறிக்கையில், இலங்கையின் பிரச்சினைகளுக்கு, இலங்கையின் தேவைகளுக்கு ஏற்ப தீர்வு காணப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி கூறினார். (உ-எ)

வனம் ஒரு நாட்டின் சுமையல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்
## தற்காலிக வேலை மேற்பார்வையாளர்
## பதவி வெற்றிடம்

யாழ்ப்பாண மாநகரசபை அமைய அடிப்படையில் வேலை மேற்பார்வையாளர் பதவி வெற்றிடங்களை நிரப்பத் தீர்மானித்துள்ளது.

**தகைமைகள்:-**

1. கல்வி — க. பொ. த. (சா. த.) இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் கணிதம், தமிழ்மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்து இருக்க வேண்டும். அத்துடன் இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியில் மூடிசார் தொழில்துறை சார்ந்த தேசிய தொழில்நுட்பச் சான்றிதழ் அல்லது அதற்குக் குறையாத சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்
2. வயது — 18 தொடக்கம் 40 வரை
3. யாழ்ப்பாண மாநகர சபையின் எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பதாரிகள் தாமே தயாரித்த விண்ணப்பத்துடனும் தமது தகைமைகளை நிரூபிக்கும் மூலச் சான்றிதழ்களுடனும் தேசிய அடையாள அட்டையுடனும் 17-10-92 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு நல்லூர் பண்டார மாளிகை வளவில் அமைந்துள்ள யாழ்ப்பாண மாநகரசபை அலுவலகத்திற்கு சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாநகராட்சி மன்ற ஆணையாளர்

மாநகர அலுவலகம்.
யாழ்ப்பாணம், 12-10-92.

[சி/3481]

## அந்தியேட்டி அழைப்பும்
## 31ஆம் நாள் நினைவஞ்சலியும்

அன்னையின் மடியில்: 04 — 03 — 1960
இறைவன் அணைப்பில்: 14 — 09 — 1992

திருமதி
### தர்மகுலசிங்கம் குமுதினி

அன்பின் இருப்பிடமாய்
பண்பின் உறைவிடமாய்
பாசத்தின் ஒளி விளக்காய்
பொறுமையின் பொக்கிசமாய்
அடக்கத்திற்கு இனியவளாய்
கற்புக்கு இலக்கணமாய்
கணவனின் பேன்மையுள்ளவளாய்
இல்லறம் என்ற நல்லறத்தை
இனிதே நடத்திய உம்மை
திடீரென மாயமாய் வந்து
யாழ் போதனா வைத்திய சாலையில்
சுவர்க்கமான காலன் 31 நாள்
சென்றாலும் ஆறுமா அம்மா உன் நினைவு
ஆன்மா சாந்தியடைய மட்டுவில் பதியில் உறையும்
பத்தி தெய்வம் கண்ணகியை பிரார்த்திக்கிறோம்

அன்னாரது அந்தியேட்டிக்கிரியை 14-10-1992 புதன்கிழமை இவரது மட்டுவில் வடக்கு நெசவு நிலைய வீதி இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்து கொண்டு அன்னாரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

உமது பிரிவால் துயருறும்;
அன்புக் கணவர், தாய் தந்தை
உடன் பிறப்புகள், உடன்பிறவா சகோதரர்கள்,
சகோதரிகள், மைத்துனர்மார்,
மைத்துனிகள்.

நெசவு நிலைய வீதி,
மட்டுவில் வடக்கு
சாவகச்சேரி.

## நன்றி நவிலல்

எனது அன்புத் தலைவி 14 - 09 - 1992 இல் யாழ் போதனா வைத்தியசாலையில் காலமானபோது அங்கு பல வழிகளிலும் உதவிய நண்பர்கள், உறவினர்கள் 15 - 09 - 1992 இல் இறுதிச் சடங்கின் போது உதவிய நண்பர்கள், உறவினர்கள், வருகைதந்த பெரியவர்கள் இன்னும் பலவழிகளில் உதவி புரிந்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்

இங்ஙனம்;
தர்மகுலசிங்கம்
(புடவை வியாபாரி)
மாமன், மாமி, பெறாமக்கள்,
மருமக்கள், சித்தப்பா,
அன்ரி.

Dr சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.

[4999]

## இன்று

யாழ்ப்பாணம், அக். 13

யாழ்ப்பாணத்தில் உள்ள வேலணை ப. நோ. கூ. சங்க மண்டபத்தில் இன்று பிற்பகல் 3-30 மணிக்கு பனை வேலை பயிற்சித் திட்டமும் தும்பை அடிப்படையாகக் கொண்ட செயற்திட்டமும் ஆரம்பித்து வைக்கப்படவிருக்கிறது.

திணைக்களத்திலிருந்து இடம்பெயர்ந்த பெண்களுக்கு சுய வேலை வாய்ப்பு அளிப்பதை நோக்கமாகக் கொண்டு இத்திட்டத்தை மகளிர் அபிவிருத்தி நிலையம் ஏற்பாடு செய்திருக்கிறது. (உ)

## அச்சுவேலி
## வாகன விபத்தில் 7 பேர் காயம்

யாழ்ப்பாணம், அக். 13

அச்சுவேலிச் சந்திக்குச் சமீபமாக, ஆஸ்பத்திரிக்கு முன்பாக நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற மினிபஸ் - வான் விபத்தொன்றில் ஏழு பேர் காயமுற்றனர் அவர்களில் மூவர் மாணவிகள் ஆவர்

யாழ்ப்பாணத்திலிருந்து பிரயாணிகளுடன் சென்ற மினிபஸ் ஒன்றும் எதிர்த்திசையில் இருந்து வந்து கொண்டிருந்த வான் ஒன்றும் மோதிக் கொண்டன.

இவ்விபத்தில் மினிபஸ் சாரதியும், பயணிகளில் நால்வரும் (அவர்களில் மூவர் மாணவிகள்) வானில் பயணம் செய்தவர்களில் இருவரும் காயமுற்றனர்.

மினிபஸ் சாரதியும், 68 வயதான அச்சுவேலியைச் சேர்ந்த பத்மாவதி என்ற பயணியும் படுகாயமடைந்தனர். அவர்கள் இருவரும் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சாரதியின் ஒரு காலைக் கழற்ற வேண்டி ஏற்படலாம் என்று ஆஸ்பத்திரி வட்டாரங்களில் இருந்து தெரியவந்தது. (அ-162)

## மண்சரிவில் 75 பேர் பலி!

கொழும்பு, அக். 13

இந்தோனேஷிய தீவான மேற்கு ஜாவாவில் நேற்று முன்தினம் ஏற்பட்ட பெரும் மண்சரிவு ஒன்றில் குறைந்த பட்சம் 25 பேர் உயிரிழந்தனர். மேலும், 50க்கும் அதிகமானோர் காணாமற் போயினர். இவர்களைத் தேடிக் கண்டுபிடிக்க மோப்பம் பிடிக்கும் நாய்கள் பயன்படுத்தப் படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது (உ-10)

## பிராந்திய ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பந்தப்பட்ட சகல தரப்பினரதும் ஆதரவைப் பெற்றுக் கொள்வதில் திரு. மங்கள முனசிங்க இப்போது ஈடுபட்டுள்ளார் என்று அறியவருகிறது.

தமிழ், முஸ்லிம் தரப்புகளின் ஆதரவைத் திரட்டியதும் அவர் தமது திட்டத்தை தெரிவுக் குழுவிடம் சமர்ப்பிப்பார் என்று தெரிவிக்கப்படுகிறது. தெரிவுக்குழு நாளை கூடவிருக்கிறது.

இதேவேளை திரு. முனசிங்காவின் ஆலோசனைகளைத் தாங்கள் வரவேற்பதாகவும் —

அதனைத் தெரிவுக்குழுவின் ஆவணமாக முன் வைத்தால் பரிசீலிக்கத் தயார் என்றும் கொழும்பில் உள்ள தமிழ்க் கட்சிகள் கூறியதாகக் கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது

இவ்வருடம் ஜூன் மாதம் 18 ஆம் திகதி நடாளுமன்றத் தெரிவுக் குழு, தமிழ்க் கட்சிகளிடம் கையளித்த உத்தேசத் தீர்வுத் திட்டத்தில் —

வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்குத் தனித்தனி மாகாண அலகுகளும் இவை இணைந்த பிராந்திய ராஜ்ய சபையும் (Apex Council) நிறுவ யோசனை தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தத் திட்டத்தை திரு. [illegible] தமிழ்க் கட்சிகள் நிராகரித்திருந்தனர். (அ)

## போதை வஸ்து கடத்தல்:
## யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெண்மணி கைதானார்

15 லட்சம் ரூபா பெறுமதியான ஒரு கிலோ ஹெரோயினுடன் சென்னையில் இருந்து கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தை கடந்த ஞாயிறு இரவு வந்தடைந்த சரஸ்வதி பொன்னுத்துரை என்ற பெயருடைய 40 வயதான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெண் ஒருவரை போதை வஸ்துத் தடுப்புப் பொலீஸார் கைது செய்தனர்.

இந்தப் பெண்ணிடம் மூன்று கொழும்பு விலாசங்கள் காணப்பட்டன என்றும் அவருக்கும் அவ்விலாசங்களுக்கும் உள்ள தொடர்பு பற்றி பொலீஸார் விசாரணை நடத்தி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

## யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், இலங்கை.
## புதிய மாணவர்களைப் பதிவு செய்தல் 1991/1992

இப் பல்கலைக்கழகத்தில் 1991/1992 ஆம் கல்வி ஆண்டிற்கான புதிய மாணவர்களைப் பதிவு செய்வதற்கான விபரங்கள் வருமாறு:-

மாணவர்கள் தமது பதிவிற்கான பின்வரும் ஆவணங்களுடன், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கீழ்க் குறிப்பிட்ட திகதியின்படி நேரடியாகச் சமுகமளிக்கவும்.

1. பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அனுமதிப் பத்திரம்
2. பிறப்புச் சான்றிதழ் (மூலப் பிரதி)
3. பாடசாலை விடுகைப் பத்திரம்
4. போட்டோ பிரதிகள் 08 (பாஸ்போட் அளவு)
5. தேசிய அடையாள அட்டை

**கட்டணங்கள்**

1. கலைப்பீட மாணவர்கள் பதிவுக் கட்டணமாக ரூபா 60/- செலுத்தும்படி வேண்டப்படுகிறார்கள்.
2. புவியியலை ஒரு பாடமாக எடுக்கும் கலைப்பீட மாணவர்களும், விஞ்ஞான, விவசாய, மருத்துவ பீட மாணவர்களும் பதிவுக் கட்டணமாக ரூபா 110/- செலுத்தும்படி வேண்டப்படுகிறார்கள்.
3. கைநூலுக்கான கட்டணம்: மருத்துவம் ரூபா 20/-
விஞ்ஞானம் ரூபா 30/-
4. மாணவர் வழிகாட்டி கட்டணம் — ரூபா 10/-

| பயிற்சி நெறி | பதிவு செய்யும் திகதி | நேரம் |
|---|---|---|
| கலை | 26-10-92 | காலை 9 00—12 00 |
| | | மாலை 1.00— 4.00 |
| வர்த்தகப் /முகாமைத்துவம் | 27-10-92 | காலை 9 00—12 00 |
| | | மாலை 1.00— 4.00 |
| மருத்துவம் / விவசாயம் | 28-10-92 | காலை 9 00—12.00 |
| | | மாலை 1 00— 4 00 |
| விஞ்ஞானம் | 29-10-92 | காலை 9.00—12.00 |
| | | மாலை 1.00 — 4.00 |

மேற்கூறப்பட்ட திகதிகளில் பதிவு செய்யத் தவறிய மாணவர்கள் பதிவு செய்யத் தவறியவர்களாகக் கருதப்படுவர்.

★ 1991/92 ஆம் கல்வி ஆண்டிற்கு புதிதாக அனுமதிக்கப்பட்ட மருத்துவபீட மாணவர்களுக்குரிய விரிவுரைகள் 28-10-92 அன்றே ஆரம்பமாகும். அன்று மாணவர்கள் விரிவுரைகளுக்கு சமுகமளிக்க ஆயத்தமாக வரும்படி வேண்டப்படுகிறார்கள்.

- பதிவாளர்

[C/3480]

## 2 ஆம் ஆண்டு நினைவு
## ஆத்ம சாந்தி வழிபாடு
## அழைப்பு

திதி:- ஆங்கீரஸ ஹு புரட்டாதி 28
[14 — 10 — 1992 புதன்கிழமை]

அவலைதீவிலிருந்து இந்தியா சென்றபோது படகு விபத்துக்குள்ளானதில் காலமானவர்களான,

எனது தாயார் சாவித்திரி
சகோதரிகள் ஹரிஹரப்பிரியா
சிவப்பிரியா
ஜனனி

ஆகியோரின் ஆத்ம சாந்திக்கான வழிபாடு நாளை புதன்கிழமை எமது திருநெல்வேலி இல்லத்தில் நடைபெறும்.

அன்பர்கள் அனைவரும் வைபவத்தில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றேன்.

இங்ஙனம்
இ. ஹரிஹரசுதன்

இ. கிருஷ்ணமூர்த்தி குருக்கள்
196, இராம விஸ்தரிப்புத்திட்டம்,
திருநெல்வேலி.

[C/3482]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் ... யாழ்ப்பாணம்

# தீவகத்தில் சிவில் நிர்வாகம் ஏற்படுத்த இன்னமும் முயற்சி

கொழும்பு, அக். 13

ஊர்காவற்றுறை, புங்குடுதீவு, அனலைதீவு, எழுவைதீவு, காரைநகர், நயினாதீவு, மண்டைதீவு ஆகிய ஏழு தீவுகளிலும் சிவில் நிர்வாகத்தை மீண்டும் ஏற்படுத்துமுகமாக மேலதிக அரசாங்க அதிபர் ஒருவர் நியமிக்கப்படவிருக்கிறார்:

இப்படி கொழும்புப் பத்திரிகைச் செய்தி தெரிவிக்கிறது.

பிரதமரும் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான டி. பி. விஜேதுங்க தலைமையில் நடைபெற்ற சிவில் நிர்வாக விசேட குழுவின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தைத் தொடர்ந்து மேலதிக அரச அதிபர் நியமனம் இடம்பெறவிருக்கின்றது.

இதுவரை தமது சம்பளங்களைப் பெறாத இத்தீவுகளில் உள்ள அரச ஊழியர்களுக்கும் உடனடியாகச் சம்பளம் வழங்கப்படவுள்ளது. இதற்கு முதல் கட்டமாக பத்து லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

(த-எ)

### மட்டக்களப்பில் பாதிப்புற்றோருக்கு

## நஷ்ட ஈடு வழங்குவதற்கு 10 கோடி 60லட்சம் தேவை

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மையில் இடம்பெற்ற அசம்பாவித சம்பவங்களில் மரணமான மற்றும் காயமடைந்தோருக்கான நஷ்டஈடு வழங்க உடனடியாக 10 கோடி 60 லட்சம் ரூபா தேவையென மதிப்பிடப்பட்டுள்ளது.

நஷ்டஈடு கோரி சமர்ப்பிக்கப்பட்ட 400 விண்ணப்பங்கள் மட்டு செயலகத்தில் கொடுப்பனவுக்கு நிதி இல்லாமல் முடங்கிக் கிடப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு புனர்வாழ்வு அலுவலகத்திற்கு கடந்த ஜூன் மாதம் 60 லட்சம் ரூபா கிடைத்தது என்றும் — அது கடந்த ஜூலை மாதத்துடன் முடிவடைந்து விட்டதைத் தொடர்ந்து நிவாரணக் கொடுப்பனவுகள் ஆங்கு ஆகஸ்ட் முதல் வழங்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(த-ம)

## ராஜகாரியர் பதவி ஏற்பு; நாடாளுமன்றில் கேள்வி

கொழும்பு, அக் 13

கலைக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மாகாணசபையின் அவைத் தலைவராகப் பதவி வகித்த திரு. ராஜகாரியர் மீண்டும் பதவி ஏற்றது குறித்து அண்மையில் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பப்பட்டது.

சுதந்திரக்கட்சி எம். பி திரு. சி. வி. குணரத்னா இது தொடர்பாக கேள்வி எழுப்பினார்.

ஒரு தலைப்பட்சமாக ஈழப் பிரகடனம் செய்த ஓர் அமைப்பின் உறுப்பினரான திரு ராஜகாரியர், ஈ. பி. ஆர். எல். எப். அமைப்புக்கு தெரிவிக்காது திருமலைக்குத் திரும்பி மாகாண சபையின் அவைத் தலைவராக மீண்டும் பதவி ஏற்றுள்ளது தொடர்பாக பிரதமர் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்?

அப்படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றால் எதற்காக 'நடவடிக்கை எடுக்கப்படவில்லை'— இப்படி அந்தக் கேள்வியில் கேட்கப்பட்டிருந்தது.

பதிலளித்த நாடாளுமன்ற விவகார அமைச்சர் எம். வின்சென்ட் பெரேரா,

'1987 மாகாணசபைச் சட்டம் 42இன் அத்தியாயம் 2, பிரிவு 7இன் படி ஒரு மாகாண சபை கலைக்கப்பட்டால் அந்த மாகாண சபையின் அவைத் தலைவர், அடுத்த மாகாணசபையின் முதலாவது கூட்டம் நடைபெறும் வரை பதவியில் நீடிப்பார்'— என்று தெரிவித்தார்.

(த-எ)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக
வெளிவாரிப் பட்டப் படிப்புகள்

B. A. Part - I;
B. Com. Part - I

இரண்டாம் ஆண்டு கற்கை நெறிக்கான விரிவுரைகள் ஆரம்பமாகின்றன.

பொருளியல்:
எஸ். வரதராஜன்
B. A. (Hons)

ஆரம்பம்:
18 - 10 - 1992
ஞாயிறு 10-00 a m

பாரதிதாசன்
கல்வி நிறுவனம்
(BECON)
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

குறிப்பு:
G. A Q ;
Ist. in Com.
விரிவுரைகள் நடைபெறுகின்றன
11 — 10 — 1992
16 — 10 — 1992
(சி-8574)

## அரையாண்டு பரீட்சை

யாழ்ப்பாணம், அக். 13

யாழ் பல்கலைக்கழக தொழிலாளர் கல்வி சான்றிதழ் நெறிக்கான இரண்டாம்— அரையாண்டுப் பரீட்சை அடுத்த மாதம் 21ஆம், 22ஆம், 28ஆம், 29ஆம் திகதிகளில் நடைபெறவிருக்கின்றன.

(த-3)

## பெண் விமானிகள்

புதுடில்லி, அக் 13

அடுத்த ஆண்டு முதல் இந்திய விமானப்படை, பெண் விமான ஓட்டிகளைப் பயிற்றுவிக்கத் திட்டமிட்டுள்ளது.

தெரிவு செய்யப்படும் பெண் விமான ஓட்டிகள் முதலில் அவ்ரோ விமானம், ஹெலிகொப்டர்கள் ஆகியவற்றில் பயிற்சி பெறுவார்கள் என்று அறிவிக்கப்படுகின்றது

(த-எ)

## கிறிஸ்தவத்துறையில் முதுமாணிப்பட்டம்

இலங்கையில் முதன்முறையாக கிறிஸ்தவத்துறையில் முதுதத்துவமாணி பட்டத்திற்கான பரீட்சையில் யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து தோற்றிய ஒருவர் சித்தி பெற்றுள்ளார்.

யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியின் உப அதிபராகவும், யாழ் புனித மாட்டீன் சிறிய குருமட பிரதி அதிபராகவும் கடமையாற்றிய அருட்திரு விக்ரர் புலேந்திரன் அடிகளாரே இப்பரீட்சையில் சித்தியடைந்துள்ளவராவார்.

இலங்கையில் இப்பட்டத்தினைப்பெறும் முதல் மாணவரும் கத்தோலிக்க குருவுமாகிய இவரது ஆய்வு 17, 18 ஆம் நூற்றாண்டுகளில் ஈழத்தில் எழுந்த தமிழ்க் கிறிஸ்தவ இலக்கியங்களைத் தளமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது.

(த-ம)

## ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பேச்சுக்களை தொடருமாம்

கொழும்பு, அக். 13

நாட்டில் இடம்பெற்று வரும் தேசிய பேரழிவுகளில் இருந்து நாட்டைக் காப்பாற்றவும்- தமிழ், முஸ்லிம் சமூகங்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு ஒன்றைக் காணவும்- தமிழ், முஸ்லிம் கட்சிகள் புதிய நம்பிக்கையுடன் பேச்சுக்களை தொடரவுள்ளன.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவர் மருதூர்க்கனி அறிக்கை ஒன்றில் முன்கண்டவாறு கூறியுள்ளார்.

(த-எ)

### யாழ். மாநகரசபை

## பாடசாலை மாணவருக்கு சுகாதாரப் போட்டிகள்

யாழ். மாநகரசபை தனது பிரதேசத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கு இடையில் சுகாதார அபிவிருத்தி சம்பந்தமான கட்டுரை, பேச்சு, சுவரொட்டிப் போட்டிகளை நடத்த உள்ளது.

யுனிசெப் நிறுவனத்தின் உதவியுடனும், யாழ் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடனும் இடம்பெற உள்ள இப்போட்டிகள் அடுத்தமாதம் 7 ஆம் திகதி காலை 9 மணி முதல் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும். போட்டிகளுக்கான விண்ணப்ப முடிவு திகதி எதிர்வரும் 31 ஆகும்.

போட்டிகள் கனிஷ்ட, மத்திய, சிரேஷ்ட பிரிவுகளாக நடத்தப்படும்.

(த-162)

## 20 வருடங்களுக்கு முன்னைய அடையாள அட்டைகள் ரத்து

20 வருடங்களுக்கு மேல் பழைமை வாய்ந்த தேசிய அடையாள அட்டைகள் விரைவில் செல்லுபடியற்றவையாக செய்யப்படும்.

ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் பந்துல குலதுங்க இத் தகவலை வெளியிட்டார்.

இவ்வாறான தேசிய அடையாள அட்டைகளை வைத்திருப்பவர்கள் வங்கிகள் அல்லது அரச திணைக்களங்கள் போன்றவற்றுடன் அவற்றைப் பயன்படுத்தி கருமங்களைச் செய்து கொள்ள முடியாத நிலை இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஆதலினால், 1972, 1973 ஆம் ஆண்டில் அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொண்டவர்கள் புதிய தேசிய அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று பொதுமக்களை ஆணையாளர் கேட்டுள்ளார்.

புதிய அடையாள அட்டைகளைப் பெறுவதற்கான விண்ணப்பப் பத்திரங்களை பொதுமக்கள் தத்தமது பகுதி கிராம சேவை அதிகாரிகளிடம் இருந்து பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அவர் கூறினார்.

(த-எ)

## இலங்கை தூதரகங்களில் எழுதுநர் பதவி; விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களில் எழுதுநர்களாகப் பணி புரிவதற்கு பொது எழுதுநர் சேவையின் முதலாம் வகுப்பினையும், இரண்டாம் வகுப்பின் 'அ' பிரிவினையும் சேர்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தேர்ந்தெடுக்கப்படும் உத்தியோகத்தர்கள் 4 வருட கால எல்லைக்கு வெளிநாடொன்றில் சேவையாற்றுவதற்கு நியமிக்கப்படுவார்கள். அவர்கள் வெளிநாட்டு சேவைக்கு அனுப்பப்படுவதற்கு முன்னர் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் பிரதான அலுவலகத்தில் கிட்டத்தட்ட இரு வருட காலம் சேவையாற்றுமாறு பணிக்கப்படலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

விண்ணப்பப்படிவங்கள் இம்மாதம் 19 ஆம் திகதிக்கு முன்னர் கொழும்பு-1, குடியரசுக் கட்டிடத்திலுள்ள வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்பட வேண்டும்.

(த-ம)

## வெள்ள அபாயம்

கொழும்பு, அக். 13

அடைமழை காரணமாக களனி கங்கை பெருக்கெடுத்துள்ளது இதனால் அவிசாவளை பகுதியில் வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

(த-எ)

# பெண்கள் போராடும் வரலாறு தமிழீழத்திலேயே நிகழ்கின்றது

## உருவப்பட திரை நீக்கவிழாவில் யோகி

வடமராட்சி, அக். 13

'உலக விடுதலைப்போராட்டங்களில் பெண்கள் பங்கு கொண்டு போராடும் வரலாறு எமது தமிழீழத்திலேயே நிகழ்கின்றது.'

தமிழீழப் போரில் வீரமரணமடைந்த முதல் பெண் போராளியான இரண்டாம் லெப். மாலதியின் திருவுருவப் படத்தை திரைநீக்கம் செய்து வைத்துப் பேசும்போது விடுதலைப்புலிகள் பிரமுகர் திரு. யோகரத்தினம் யோகி இவ்வாறு தெரிவித்தார்.

வடமராட்சி மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் செல்வி தணிகா செல்வி தலைமையில் நடைபெற்ற மேற்படி விழாவில் உரையாற்றும் போது திரு. யோகி மேலும் தெரிவித்ததாவது;

உலக நாடுகள் பலவற்றில் பெண்கள் பிரதமர்களாக இருந்துள்ளனர். ஆனால் அவர்கள் விடுதலைப் போராட்டங்களில் பங்குபற்றியது இல்லை.

ஆனால் லெப். மாலதி விடுதலைப் போராளியாகவும், மண்மீட்புப் போரில் முதலில் வீரச்சாவடைந்த முதல் பெண் போராளியாகவும் திகழ்கின்றார்.

இந்திய இராணுவம் இந்த மண்ணில் காலடி வைத்த போது எமது மக்கள், இந்தியா தம்மைக் காப்பாற்றும் என்று எண்ணினர். ஆனால் அதற்கு மாறாக இந்திய இராணுவம் செயற்பட்டது என்றார்.

வைபவத்தில் கலை, பண்பாட்டுக் கழகத் துணைப் பொறுப்பாளர் திரு. தேவர், கல்விக் குழுவைச் சேர்ந்த செல்வி மாதினி, செஞ்சோலைப் பொறுப்பாளர் செல்வி ஜனனி ஆகியோரும் உரையாற்றினர்.

(த-165-144)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனையாகின்றது

சகலவிதமான தீபாவளி வாழ்த்துக்கள் விற்பனையாகின்றன. மொத்தமாகவும், சில்லறையாகவும் கிடைக்கும் இடம், மகிமைன் புத்தகசாலை இல, 3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம், ஸ்ரீகாந் புத்தகசாலை, நல்லூர். (கி/3579)

சைவநெறி வினா-விடை (ஆண்டு 10-11) ஆக்கம் இலக்கிய வித்தகர் த. துரைசிங்கம் B. A. (Hons) Dip. in Ed. எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும்: ஸ்ரீகாந்தா புத்தகசாலை, இல. 330, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (22850)

### வாழ்த்து மடல்கள்

ஏராளமான டிசைன்களில் அழகிய தீபாவளி வாழ்த்து மடல்கள், லட்சுமி, சிவசக்தி, ராஜேஸ், ராசேந்திர குமார்கள் நாவல்களும், சிறுவர் அரிச்சுவடிகளும் விற்பனையாகின்றன. ராஜன் புத்தகசாலை, இல 12, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (22848)

### உடன் விற்பனைக்கு

Highline+ Prima+ Bahira வெள்ளை, கறுப்பு, பிறவுண் லேட்டு குஞ்சுகளும், புறொயிலர் குஞ்சுகளும், சேவல் குஞ்சுகளும் உடன் தொடர்பு கொள்ளவும். 'மல்லிகாபதி' சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (22795)

### மாதிரி வினாத்தாள்கள்

O/L வகுப்புகளுக்கான கணிதம், விஞ்ஞானம், தமிழ், சமூகக்கல்வி, ஆங்கிலம், சமயம் (சைவம்/றோமன்/கிறிஸ்தவம்), வர்த்தகம் விவசாயம், மனைப் பொருளியல், சித்திரம், சங்கீதம், நடனம், ஆகிய பாடங்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் (விடைகளுடன்) மலிவு விலையில் விற்பனையாகின்றன. Bond Institute, 582, Stanley Road, Jaffna. (கி/3541)

### வெளிவந்துவிட்டது

சைவநெறி ஆண்டு-10 துரித மீட்டலுக்கான வினா-விடை ஆக்கம்: க. சந்திரசேகரம். மீள்பார்வை: ஆத்மஜோதி நா. முத்தையா அவர்கள், வெளியீடு: சோதி வெளியீட்டு வாரியம். ஏகவிநியோகஸ்தர்கள்: ஸ்ரீலங்கா புத்தகசாலை, 234, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி-3466)

### ஆண்டு - 5 புலமைப் பரிசில்

அடுத்த புலமைப் பரிசில் பரீட்சைக்காக இப்பொழுதிருந்தே பயிற்சி அளிக்கும் ஆர்வமுள்ள பெற்றோர்களுக்காக மாதிரி வினாத்தாள்களை எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். வீட்டில் வைத்து விடையளித்துத் தந்தால் இலவசமாகத் திருத்தி விடைகளுடன் கொடுக்கப்படும். Bond Institute 582, Stanley Road, Jaffna (கி-3540)

### இலவச திருமண சேவை

33 வயது, பரணி, இராகவம் 5, வீரசைவம் சவுதியில் தொழில் புரிபவருக்கு மணமகள் தேவை. மணமகன் யாழ். வந்துள்ளார் தொடர்பு ஞாயிறு காலையில் து. விமலா, யாழ். நாச்சிமார் கோவடி. (22869)

32 வயது, புனர்பூசம், செவ்வாய் 2, கனடா செல்லவுள்ள பெண்ணுக்கு மணமகன் தேவை. கனடாவில் உள்ளவர்/செல்ல விரும்புபவர் தொடர்பு, ஞாயிறு காலையில், து. விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி. (22870)

### இடம்மாற்றம்

இதுவரை காலமும் கோவில் வீதி, நல்லூரில் இயங்கி வந்த சித்ராலயா ஸ்ருடியோ 05-10-92 முதல் ஸ்ரான்லி வீதியில் உள்ள பழைய இடத்தில் இயங்குகின்றது என்பதை சகலருக்கும் அறியத்தருகின்றோம். (5364)

### வினைத்திறன் பயிற்சி

ஊழியரின் வினைத்திறனை அதிகரிக்கும் நோக்குடன் யாழ். மாநகர சபை விசேட பயிற்சி வகுப்புக்களை ஏற்பாடு செய்துள்ளது.

இதற்கென வடக்கு - கிழக்கு மாகாண சபையின் உள்ளூராட்சி ஆணையாளர் யாழ். மாநகர சபைக்கு 90 ஆயிரம் ரூபாவை ஒதுக்கியுள்ளார்.

ஏற்கனவே இத்திட்டத்தின் கீழ் ஒரு தொகுதியினருக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. (ஒ-ம-162)

### ஆண்டு 6 அனுமதி

பாடசாலை அனுமதிப் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்கள் 01 - 10 - 92 முதல் 16 - 10 - 92 வரை மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம். Bond Book - Stall, 582, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (கி-3539)

### போட்டோ வேலைகள்

குறைந்த சார்ஜ், குறித்த நேரம் தரன் ஸ்ருடியோ, தீபாவளித் தினத்தை முன்னிட்டு 09-10-92 — 27-10-92 வரை சகல வித போட்டோ மற்றும் வேலைகளுக்கு இல: 189, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (22820)

## இனப்பிரச்சினைத் தீர்வுக்கு எனது யோசனையே உகந்தது

### அமைச்சர் தொண்டா சொல்கிறார்

கொழும்பு, அக். 13

"இனப்பிரச்சினைக்கு நான் முன் வைத்த யோசனைகள் இன்றைய அரசியல் அமைப்பில் திருத்தங்களை செய்யாமலேயே அரசியல் தீர்வு ஒன்றைக் காண உகந்தவையாகும்"— அமைச்சர் தொண்டமான் முன்கண்டவாறு தெரிவித்தார்.

"எனது யோசனைகள் விடுதலைப் புலிகளினாலும் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியவை"— என்றும் அவர் தெரிவித்தார்.

கொழும்புத் தமிழ்ப் பத்திரிகை ஒன்று இவ்வாறு செய்தி வெளியிட்டுள்ளது. (த-எ)

## பாலர் பாடசாலைச் சிறுவர் போசாக்கின்றிப் பாதிப்பு

வண்ணார்பண்ணை, அக். 13

யாழ் மாநகரசபைப் பகுதியில் உள்ள பாலர் பாடசாலைகளில் கல்வி பயிலும் பிள்ளைகள் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பாலர் பாடசாலைகளில் கல்வி பயிலும் பிள்ளைகளில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் இருந்து இது தெரியவந்துள்ளது

இதனைத் தொடர்ந்து உள்ளூரில் கிடைக்கும் மூலப் பொருள்களைக் கொண்டு எவ்வாறு குழந்தைகளுக்கான சத்துணவைத் தயாரிப்பது என்பதனை விளக்கும் செயல் முறை போதனை வகுப்புகள் யாழ் மாநகர சபைப் பகுதியில் நடத்தப்படுகின்றன.

இதற்கான உதவியை 'யுனிசெப்' நிறுவனம் வழங்கி வருகிறது.

கொழும்புத்துறை நெடுங்குளம் மகப்பேற்று நிலையம், அரியாலை சாந்தி சனசமூக நிலையம், வண்ணார் பண்ணை மகப்பேற்று நிலையம் ஆகியவற்றில் இப்போதனை வகுப்புகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (த-ம-162)

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலியும் 90ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்





அமரர்
**கனகநாயகம் பத்மநாதன்**
தோற்றம்: 22 — 03 — 1940
மறைவு: 29 — 10 — 1987

ஆண்டுகள் ஐந்து சென்றாலும்
ஆறாத் துயரில் நாம் இருக்க
சேர்ந்து நினையுங்கள் என்று
செல்வியையும் அழைத்தீரோ!

செல்வி
**பத்மநாதன் தமிழ்ச்செல்வி**
மலர்வு: 28 — 06 — 1965
உதிர்வு: 16 — 07 — 1992

கல்யாணக் காட்சி காண
காத்திருந்த எங்களை
கனவு காண வைத்து விட்டு
கண்ணனடி சேர்ந்தீரோ!

16-07-1992 அன்று எங்கள் ஒளிவிளக்கு அகாலமரணம் அடைந்த போது நேரில் வந்தும், அனுதாபச் செய்திகளை அனுப்பியும், எங்கள் துயரில் பங்கு கொண்ட அனைவருக்கும் நன்றி கூறி, இன்று 13-10-1992 இல் எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உரிமையாளர்:
'நியூ பாலகிருஷ்ணாஸ்' குடும்பத்தினர்.

75/19, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். (22865)

## நெஞ்சில் நிறைந்த முதலாம் வருட ஞாபகம்

13 — 10 — 1992



**திருமதி ஞானம்மா விக்ரர் இம்மானுவல்**

"படைத்தவன் பால் அன்பு செய்தாய்
அவன் உன்னைத் தனக்கே உரித்தாக்கி விட்டான்;
உன் பிரிவால் தவிக்கின்றோம் நாமல்லோ"

பிரிவால் என்றும் வாடிநிற்கும்;

கணவன், தாய், பிள்ளைகள்,
மருமகன், சகோதரர்கள், மைத்துனர்,
மைத்துனி, பெறாமக்கள், மருமக்கள்.

இல. 4, கோவில் வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம். (22871)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### கொழும்பின் சவால்

மனித உரிமைமீறல்களில் இலங்கையே முதலிடம் வகிக்கிறது. ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் செயற்குழு இலங்கைக்குப் பொறித்த முத்திரை இது!

இந்த அகில உலகப் 'பெருமையைத்' தேடிக் கொண்ட இலங்கையில் இப்போது மனித உரிமைகள் சம்பந்தப்பட்ட இரண்டு சர்வதேசக் குழுக்கள் நேரில் விசாரணைகளை நடத்த வந்திருக்கின்றன. மனித உரிமை மீறல்களைத் தடுக்க அரசாங்கம் உள்மனத்தோடு உருப்படியாக ஏதாவது செய்கிறதா என்பதனைக் கண்டறிவதே இக்குழுக்களின் வருகையின் நோக்கமாகும்.

இப்படி எத்தனை குழுக்கள் விஜயம் செய்தாற்போல் என்ன? அரசு அதிகாரிகளும் அரச படையினரும் மனித உரிமைகளை மீறாமல் செயற்படுவார்கள் என்று எதிர்பார்ப்பது வீணானதாகும்!

ஐ நா மனித உரிமைகள் செயற்குழு பிரதிநிதிகள் கடந்த வருடம் அக்டோபரிலும் இலங்கைக்கு வந்திருந்தனர். பின்னர் மீண்டும் இப்போது வந்துள்ளனர். ஐ நா. குழுவின் பிரதிநிதிகள் ஒரு நாட்டுக்கு இரண்டு தடவைகள் விஜயம் செய்வது வழமையல்ல. அவர்கள் அடுத்தடுத்து இங்கு வந்திருப்பது இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவதன் மிகப் பெருத்த கனத்தைக் காட்டுவதாகும்.

சென்ற வருடம் ஐ நா. குழு வந்து போன பின்னர் சமர்ப்பித்த பரிந்துரைகளைத் தொடர்ந்து கொழும்பு அரசு மனித உரிமைகள் செயலணிகள் மூன்றை உருவாக்கியது.

ஆனால் அவை 1991 ஜனவரி 11 ஆம் திகதிக்குப் பிந்திய மனித உரிமை மீறல்களை விசாரிப்பதற்கு மட்டுமே அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. உண்மையில் 1983 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தமிழ்ப் பகுதிகளில் படையினர் மிகப்பெரிய அளவிலான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டனர். தெற்கிலும் படைகளும், அரசின் ஆதரவுடன் செயற்பட்ட கொலைக் குழுக்களும் பரந்த அளவிலான மனித உரிமை மீறல்களை இழைத்தன. இரு பிரதேசங்களிலும் நீதி விசாரணை எதுவுமின்றி பல்லாயிரக்கணக்கானோர் கொடிய முறையில் கொல்லப்பட்டனர். அதுவுமன்றி, மற்றும் பல்லாயிரக்கணக்கனோர் காணாமற் போனோர் பட்டியலிலும் சேர்க்கப்பட்டார்கள்.

குறிப்பிட்ட 1983—90 காலப் பகுதியில் 14,000க்கும் மேற்பட்டோர் காணாமற் போனதாக ஐ நா. மனித உரிமை செயற்குழுவுக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

ஆனால் 11-1-1991க்கு முன்னர் நடந்த மனித உரிமைகள் மீறல்கள் பற்றிய முறைப்பாடுகள் குறித்து விசாரணை நடத்துவது என்பது நடைமுறைக்குக் கடினமானது என்றும் இயலாத விடயம் எனவும் ஜனாதிபதியின் ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்திருக்கிறார்.

இது 14 000 பேர் காணாமற் போயினர் என்பதை மறைப்பதற்கான, துடைத்தெறிந்துவிடுவதற்கான செயற்பாடு. முழுப் பூசினிக்காயையும் சோற்றில் புதைத்துக் காட்டுவோம் என்று இலங்கை அரசு ஐ நா. உட்பட அகில உலகத்துக்கும் விடுக்கும் சவால்!

# சுதந்திரக்கட்சியின் பிக்கு அணி அனுராவின் பக்கமாம்!

கொழும்பு, அக 13

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின பௌத்த பிக்குகள் முன்னணி, கட்சியின் தலைவர் திருமதி சிறிமா பண்டாரநாயக்காவின் உத்தரவுக்குப் பணியாது, தமது வருடாந்தப் பொதுக்கூட்டத்தைத் திட்டமிட்டபடி நடத்தியிருக்கிறது

அந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் ஒன்றில் திரு. அனுரா பண்டாரநாயக்காவை கட்சியின் தலைவராக நியமித்து கட்சிக்கு புத்துயிர் அளிக்க வேண்டும் என்று கோரப்பட்டிருக்கிறது.

ஆலோசனை வழங்கும் பொறுப்பை மட்டுமே திருமதி சிறிமா பண்டாரநாயக்கா இனிமேல் வகிக்க வேண்டும் என்று மற்றொரு தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

திருமதி சிறிமா பண்டாரநாயக்காவின் வழி நடத்தலின் கீழ் கட்சியைப் பலப்படுத்தும் பொறுப்பை திரு. அனுரா பண்டாரநாயக்காவிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் தீர்மானத்தில் கூறப்பட்டிருக்கிறது.

உட்கட்சித் தேர்தல்களை விரைவில் நடத்தும்படி கட்சியின் தலைமைப் பீடத்தை கோரும் பிரேரணையும் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது

திருமதி பண்டாரநாயக்காவின் பிரதிநிதியாக திரு. கே. பி. இரத்னாயகா கூட்டத்தில் கலந்து கொண்டார்.

அனுரா கோஷ்டியைச் சேர்ந்த மகிந்த ராஜபக்ஷ, ஹெல உறுமய தலைவர் திலக் கருணாரத்னா ஆகியோரும் பிக்குகள் முன்னணிக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

அண்மையில் இடம்பெற்ற சுதந்திரக் கட்சி வாலிப முன்னணியின் பொதுக் கூட்டத்தில், முன்னணியை அனுரா கோஷ்டியே கைப்பற்றியது என்றும் —

இப்போது பிக்குகள் முன்னணியும் அனுரா ஆதரவாளர்களின் கைகளுக்குள் சென்றிருப்பது. அனுரா கட்சியில் தமது நிலையை படிப்படியாக பலப்படுத்தி வருவதைக் காட்டுவதாக உள்ளதாகவும் அரசியல் அவதானிகள் தெரிவித்தனர். (உ-எ)

## மன்னார் ஆயரின் திருநிலைப்படுத்தல்

குருநகர், அக் 13

புதிதாக ஆயர் நிலைபெற்ற கலாநிதி அதி. வண இராயப்பு யோசெப் ஆண்டகை இம்மாதம் 20 ஆம் திகதி மன்னார் மறை வட்ட ஆயராக மடுப்பதியில் வைத்து திருநிலைப்படுத்தப்படுவார் என அறிவிக்கப்படுகிறது.

யாழ். மறைவட்ட ஆயராக முன்னாள் மன்னார் ஆயர் அதி. வண. கலாநிதி தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை அடுத்த மாதம் 5 ஆம் திகதி யாழ் வந்து தமது பொறுப்புகளை ஏற்பார் என்றும் தெரிய வருகிறது (உ-51)

## மற்றொரு வழக்கிலும் பெனாஸிர் கணவர் விடுதலை

அரசியல் எதிரிகளைக் கொலை செய்யும் சதி முயற்சியில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கில் பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் பெனாஸிர் பூட்டோவின் கணவரான ஆஸிப்அலி விடுதலை செய்யப்பட்டார்.

பிரதமராகவிருந்த பெனாஸிர் பூட்டோவை, பதவியில் இருந்து ஜனாதிபதி குலாம் இஷாக்கான் விலக்கியதன் பின்னர் — நான்கு மாதங்கள் கழித்து — 1990 அக்டோபரில் ஆஸிப் அலி சர்தாரி கைது செய்யப்பட்டார்.

இவர் மீது ஊழல், அரசியல் கடத்தல் மற்றும் கொலை, பணம் பறித்தமை ஆகிய தொடர்பாக பல வழக்குகள் அரசினால் தாக்கல் செய்யப்பட்டன.

அவற்றில் ஊழல் தொடர்பான வழக்குகளில் சர்தாரி குற்றவாளியல்லர் என்று காணப்பட்டு ஏற்கனவே விடுவிக்கப்பட்டார்.

இப்போது அரசியல் கொலைச் சதியில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கில் இருந்து சர்தாரி விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்.

ஆட்கடத்தல் மற்றும் பணம் பறித்தது ஆகிய குற்றச்சாட்டுகள் தொடர்பான வழக்குகள் இனிமேல் விசாரணை செய்யப்படவுள்ளன.

1990 அக்டோபரில் கைது செய்யப்பட்ட நாள் முதல் சர்தாரி சிறையில் இருந்து வருகிறார். (உ-எ)

## கட்டளை பணியக வாகனமே புலிகள் வசம் சிக்கியது!

கொழும்பு, அக் 13

கடந்த இரண்டாம் திகதி கட்டைக்காடு மினி இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலின்போது புலிகளினால் கைப்பற்றிய ஜீப் இராணுவத்தினரின் "கட்டளைப் பணியக வாகனம்" (Commanding Vehicle) என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஜீப்பில் நவீன தொலை தொடர்பு சாதனங்கள் பொருத்தப்பட்டிருந்தன. இதனை லெப்டினன்ட் கேணல் தரத்தில் உள்ள ஒருவரே பாவிக்க முடியும் தாக்குதல் நடத்தும் சமயங்களில் இந்த வாகனத்தில் இருந்தே தளபதி உத்தரவுகளைப் பிறப்பிப்பது வழக்கம்.

றொக்கட் லோஞ்சர் ஒன்றும் இந்த வாகனத்தில் பொருத்தப்பட்டிருந்தது. வாகனத்தில் இருந்து வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள எந்த ஒரு இராணுவ முகாமுடனும் தொடர்பு கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. (உ-எ)

### முகாம் வீழ்ந்த செய்தியால்

## ராணுவத் தலைமையகத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது

கொழும்பு, அக். 13

கடந்த 2ஆம் திகதி கட்டைக்காடு இராணுவ மினி முகாமை புலிகள் கைப்பற்றிய செய்தி பலாலி முகாமில் இருந்த இராணுவத் தலைமையகத்துக்கு அறிவிக்கப்பட்டதும், அங்கு பெரும் பதற்றம் நிலவியது

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ரணதுங்க முப்படைத் தளபதிகளையும் அழைத்து அவசர மாநாடு ஒன்றை நடத்தினார்.

அதன் பின்னர் வடக்கு-கிழக்கு மாகாணத்திலுள்ள படையினரை 24 மணி நேரமும் உஷாராக இருக்கும்படி உத்தரவு விடுக்கப்பட்டது.

சம்பவம் குறித்து உயர் மட்ட விசாரணைக்கும் உத்தரவிடப்பட்டது

இத் தாக்குதலின் போது படையினர் பெருமளவு ஆயுதங்களை இழந்திருப்பது அவர்களுக்குப் பெரும் ஆபத்தையே விளைவிக்கப்போவதாக இராணுவ நிபுணர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவம் படையினருக்கு அழிக்கமுடியாத அவப்பெயரை ஏற்படுத்தி இருப்பதுடன், உயிராபத்தையும் எதிர்நோக்க வேண்டிய ஓர் இக்கட்டான சூழ் நிலைக்குத் தள்ளியிருப்பதாக சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவித்தார்.

### தடுப்புக் காவலில் உள்ள

## பொலீஸாரை விடுவிக்க புலிகள் இணக்கமாம்!

### அஸ்ஸாஜி தேரர் கூறுகிறார்

விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள 41 பொலீஸாரையும் யாழ்ப்பாணம் சென்று அழைத்து வர கூட்டுப்படைத் தலைமையகத்தின் அனுமதியை எதிர்பார்த்திருப்பதாக சங்கைக்குரிய மாதம்பாகம அஸ்ஸாஜி தேரர் தெரிவித்தார்.

கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று இத்தகவலை வெளியிட்டது.

"தடுத்து வைக்கப்பட்டுள்ள 41 பேரையும் விடுவிப்பது குறித்து செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்கள் நடத்தப்பட்டன.

மனிதாபிமான ரீதியில் அவர்களை விடுவிக்க விடுதலைப் புலிகளும் இணங்கியுள்ளனர் தெரிவித்தனர்.

"இதனையடுத்து யாழ்ப்பாணம் செல்வதற்கு எங்களுக்கு அனுமதி வழங்கும்படி கூட்டுப்படைத் தலைமையகத்திடம் கடந்த மாதம் விண்ணப்பித்தோம். ஆனால் இது வரை எங்களுக்கு பதில் எதுவும் கிடைக்கவில்லை"—இவ்வாறு அஸ்ஸாஜி தேரர் தெரிவித்ததாக அச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டிருந்தது. (உ-த)

### யாழ். விஜயம்

கத்தோலிக்க மேற்றாசன இணைப்பகத் தலைவர் அருட்திரு ஒஸ்வோல்ட் கோமஸ் நான்கு நாள் நல்லெண்ண விஜயம் மேற்கொண்டு தமது குழுவினருடன் இன்று யாழ்ப்பாணம் வருகிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## இந்திய அரசின் போக்கை சாடுகிறார் வெங்கட்ராமன்

சென்னை, அக். 13

சர்வதேச நாணய நிதியத்தின் (ஐ. எம். எவ்.) நிபந்தனைகளுக்கு இந்தியா தலைவணங்குகின்றது என்று கூறி முன்னாள் ஜனாதிபதி ராமசாமி வெங்கட்ராமன் புதுடில்லி மத்திய அரசைக் கண்டித்திருக்கின்றார்.

தமிழ்நாடு — அரக்கோணம் நகரில் நடந்த தொழில் அதிபர்கள் மாநாட்டில் கலந்து கொண்டு பேசுகையில் அவர் இக்கண்டனத்தைத் தெரிவித்தார்.

பெரும்பாலும் பிரச்சினைக்குரிய விஷயங்களில் கருத்து வெளியிடாது இருந்து வந்த அவர், இப்போது இக்கண்டனத்தை வெளியிட்டிருப்பது மத்திய அரசுக்கு எதிரான எதிர்க்கட்சிகளின் நடவடிக்கைகளுக்கு ஊக்களிப்பதாக உள்ளதாக அரசியல் அவதானிகள் கூறியுள்ளனர்.

தமிழகத்தில் ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க. அரசை பிரதமர் நரசிம்மராவ் பதவி நீக்கஞ் செய்யக்கூடும் என்று பரவலாக வதந்திகள் அடிபடும் இவ்வேளையில், முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு ஆதரவானவர் எனக் கருதப்படும் திரு வெங்கட்ராமன் மத்திய அரசை விமர்சனம் செய்திருப்பது குறிப்பிடத்தக்க ஒன்று என தெரிவிக்கப்படுகிறது.

### யாழ். பல்கலைக்...

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

மேன்முறையீடுகளை ஆராய்வதற்கு தனிநபர் குழு ஒன்றை மானிய ஆணைக்குழு நியமித்துள்ளது. பெயர்ப்பட்டியலில் பெயர் காணப்பட்டும் அனுமதிக் கடிதங்கள் கிடைக்காதோர் மேன்முறையீட்டுக் குழுவுக்கு விண்ணப்பிக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்படுகிறது

யாழ். பல்கலைக் கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் இம்மாதம் 31 ம் திகதிக்கு முன்னர் தமது பெயர்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டும். அவ்வாறு பதிவு செய்யத் தவறுவோரின் பெயர்கள் நவம்பர் முதலாம் திகதியுடன் நீக்கப்படும்.

இதேவேளை மருத்துவபீட புதிய மாணவர்களுக்கான கல்வியாண்டு இம்மாதம் 28 ம் திகதி ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டது

#### மொத்தம் 8,900 மாணவர்

இதற்கிடையில், 1991 - 92 கல்வி ஆண்டுக்கு நாட்டில் மொத்தம் உள்ள எட்டுப் பல்கலைக் கழகங்களுக்கும் 8,900 மாணவர்கள் புதிதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளவர். அவற்றின் விபரம் வருமாறு :-

| | |
|---|---|
| ★ பேராதனை | — 1 802 |
| ★ கொழும்பு | — 1,564 |
| ★ ஜெயவர்தனபுர | — 1 627 |
| ★ களனி | — 1 231 |
| ★ ருகுணு | — 1,030 |
| ★ மொறட்டுவை | — 496 |
| ★ கிழக்கிலங்கை | — 248 |

இம்முறை மருத்துவத் துறைக்கு மொத்தம் 882 மாணவர்களும், பொறியியல் துறைக்கு 717 மாணவர்களும், உயிரியல் விஞ்ஞானத்துக்கு 911 மாணவர்களும், பௌதிக விஞ்ஞானத்துக்கு 1 235 மாணவர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். கலைத் துறைக்கு மொத்தம் 2,696 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (அ)

## வெள்ளத்தில் 70 பேர் பலி!

புதுடில்லி, அக். 13

தென்னிந்திய மாநிலமான கேரளத்தில் வெள்ளப் பெருக்கினால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 70 ஆக உயர்ந்துள்ளது. (உ-10)

## எகிப்தில் நிலநடுக்கம்

கெய்ரோ, அக் 13

மிகவும் மோசமான நில நடுக்கம் ஒன்று நேற்று எகிப்தின் தலைநகர் கெய்ரோவைத் தாக்கியதாக பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன

1கோடி 20 லட்சம் மக்கள் தொகை கொண்ட கெய்ரோ நகரத்தில் இந்த நில நடுக்கம் 1 நிமிட நேரம் நீடித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது, நகரம் எங்கும் புகை மண்டலம் சூழ்ந்திருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் வெளியீட்டகத்தினர் யாழ். பல்கலைக்கழகத்துடன் இணைந்து நடத்தும் கட்டுரைப் போட்டி

யாழ். கல்விப் பணிமனையின் அனுசரணையுடன் நடத்தப்படும்

## மாணவர்களுக்கான போட்டிப் பரீட்சை

இடம்:- யாழ். இந்து மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.

காலம்:- 18 - 10 - 1992 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 09. 30 மணி

மேற்படி போட்டிப் பரீட்சையில் பங்கு பற்றக் கொத்தணிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கான அனுமதிப் பத்திரங்கள் அந்தந்த கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

தெரிவான சகல மாணவர்களும் தமது ஆளடையாளச் சான்றுடன் பரீட்சை மண்டபத்திற்குச் சரியான நேரத்தில் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.



# மரண அறிவித்தல்கள்

## A. C. முத்துராஜா

(இளைப்பாறிய கூட்டுறவு பரிசோதகர்)

காலஞ்சென்ற சின்னப்பா தம்பதிகளின் புதல்வனும், திருமதி அழகம்மாவின் அருமைக் கணவரும், சித்திரா (கானான், தர்மபுரம்), தாசன் (U. K.), சுகேந்திரா, சுமித்திரா, மாலினி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், குருகுலராஜா (கல்வித் திணைக்களம், கிளிநொச்சி), விஜிதா (U. K.), செசர்ணலிங்கம், சாந்தகுமார், தேவகுணநேசன் ஆகியோரின் அன்பு மாமனாரும், A. C. செல்வராஜா, திருமதி திரேஸ் சற்குணலிங்கம், திருமதி மேர்ஸி இராஜநாயகம், திருமதி றோஸி தம்பிஐயா, காலஞ்சென்றவர்களான Rev. A. C. துரைராஜா, A. C. ஜெயராஜா, A. C. கனகராஜா ஆகியோரின் பிரிய சகோதரருமான A. C. முத்துராஜா காலமானார். நல்லடக்க ஆராதனை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
திருமதி சுமித்திரா சாந்தகுமார்.

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.
[22872]

## இலகுப்பிள்ளை ஆறுமுகம்

[இளைப்பாறிய கூட்டுறவுப் பரிசோதகர்]

மூளாயைச் சேர்ந்தவரும், காலஞ்சென்ற பரஞ்சோதி அம்மாளின் அன்புக் கணவரும், ஏகாம்பரநாதன் [மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை], கனகநாயகி ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவசக்தியின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற க. சச்சிதானந்தனின் [யாழ்ப்பாணக் கல்லூரி] அருமை மைத்துனரும் ஆகிய இலகுப்பிள்ளை ஆறுமுகம் 12 - 10 - 1992 அன்று காலமானார். இறுதிக்கிரியைகள் இன்று 13 - 10 - 1992 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

தகவல்:
ஏகாம்பரநாதன்,
(மகன்)

டச்சு வீதி,
மூளாய், சுழிபுரம்.
[22873]

## கணபதிப்பிள்ளை தங்கமுத்து

புங்குடுதீவு, 10ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் 18/4 பாண்டியந்தாழ்வு சந்தனமாதா லேனை தற்போதைய வசிப்பிடமாகக் கொண்டவருமான, கணபதிப்பிள்ளை தங்கமுத்து அவர்கள் காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும், சிவபாக்கியத்தின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற நாகரெத்தினத்தின் அன்பு மாமியாரும், நல்லதம்பி [கொழும்பு வர்த்தகர்], பொன்னம்மா, செல்லையா [கொழும்பு வர்த்தகர்], காலஞ்சென்றவர்களான கந்தையா, சின்னத்துரை, சின்னம்மா, பொன்னம்பலம் ஆகியோரின் சகோதரியும், புவனேஸ்வரி வீரசிங்கம், காலஞ்சென்ற சின்னம்மா, மாணிக்கம், கண்ணம்மா, பார்வதி, சிவக்கொழுந்து, கந்தையா ஆகியோரின் மைத்துனியும், திருமதி பிரபா பொன்னுத்துரை, பிரபாகரன் சறோ [சுவிஸ்], திருமதி பிருந்தாதேவி குலேந்திரராஜன் [கனடா], பிரதாபன் தனிலா [சுவிஸ்], ஜெயந்தி, ரஜனி ஆகியோரின் பேர்த்தியும், அனஜா, ஜீவன் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 13-10-92 இன்று காலை 10 மணிக்கு துண்டி மயானத்திற்கு தகனகிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
மு. பொன்னுத்[illegible]
(பேரன்)

18/4 இராஜபாண்டியன் வீதி,
பாண்டியந்தாழ்வு.
(22874)


## இன்று முதல் தபால் விநியோகம்

யாழ்ப்பாணம், அக் 13

குமாரி கப்பலில் எடுத்து வரப்பட்ட 547-தபால் பொதிகளும் தரம் பிரிக்கப்பட்டு இன்று தொடக்கம் விநியோகிக்கப்படும் என வடமாகாண பிரதித் தபால் மா அதிபர் எஸ். எம். சேதுகாவலர் நேற்றுத் தெரிவித்தார். [உ-17]

## வலி. வடக்கிற்கு செஞ். குழு விஜயம்

யாழ்ப்பாணம், அக். 13

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் பிரதிநிதிகள் நேற்று இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள வலி வடக்குப் பகுதிக்குச் சென்றனர்.

அங்கு சிக்கியுள்ள மக்களை அவர்கள் சந்திப்பர் எனத் தெரிவிக்கப்பட்டது.

[உ-17]

## ஒப்படைப்பு

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா மீது பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுகளைச் சுமத்தும் மகஜர் ஒன்றை ஜனதாக் கட்சித் தலைவர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி தலைமையிலான 15 உறுப்பினர்கள் அடங்கிய குழு ஒன்று மாநில ஆளுநர் பீஷ்ம நாராயண சிங்கிடம் நேற்று சமர்ப்பித்தது

### விமானப்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மும் தனித்தனியாக கையளிக்கப்பட்டிருந்த அதிகாரங்கள் அவர்களிடமிருந்து பிடுங்கப்பட்டு, மீண்டும் கூட்டுப் படைத் தலைமையகத்திடம் ஒப்படைக்கப்பட்டதால் எழுந்த மனக்கசப்பினாலேயே விமானப்படைத் தளபதி தமது பதவியை இராஜினாமாச் செய்ய முடிவு செய்தார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது பாதுகாப்பு படையினரின் அதிகாரக் கட்டமைப்பில் செய்யப்பட்டுள்ள மாற்றங்கள் குறித்து முன்னாள் விமானப் படைத் தளபதி ஹரி குணதிலக்க கூறியதாவது:-

மூன்று படைத்தளபதிகளும் பொலிஸ் மா அதிபரும், அதிகாரத்தைத் தங்களிடம் தருமாறும், தாங்கள் 6 மாதத்தில் வேலையை முடித்துத்தருவதாகவும் கூறியதாலேயே கூட்டுப் படைகள் தலைமையகத்திடமிருந்த அதிகாரம் படைத் தளபதிகளுக்கும் பொலிஸ் மா அதிபருக்கும் கொடுக்கப்பட்டது.

இந்தக் கால எல்லை ஆகஸ்ட்டுடன் முடிவடைந்தது. ஆனால் எதிர்பார்த்தபடி வேலை முடிக்கப்படவில்லை. எனவே இது குறித்து ஒரு முடிவு எடுக்க வேண்டிய தேவை ஜனாதிபதிக்கு இருந்தது.

தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள மாற்றங்கள், படைத்தளபதிகள் மத்தியில் கசப்புணர்வைக் கிளப்பிவிட்டுள்ளது. விமானப் படைத் தளபதி டெரன்ஸ் குணவர்த்தனா ஓரிரு தினங்களில் இராஜினாமா செய்யப்போவதாக கதையடிபடுகிறது.

அரசுக்கும் ஜனாதிபதிக்கும் படைத் தளபதிகள் கொடுத்த வாக்குறுதிகள் பிழைத்துவிட்டன என்பதை எல்லோரும் அறிவார்கள்.

ஒரு போரில் இரண்டு அதிகார பீடங்கள் செயற்பட முடியாது.

படைத் தளபதிகளுக்கும் பொலிஸ் மா அதிபருக்கும் அதிகாரங்கள் அளிக்கப்பட்டன. ஆனால் ஆலோசனை வழங்குவது கூட்டுப் படைத் தலைமையகமாக இருந்தது. இது போன்ற இரட்டை அதிகார பீடங்கள் ஒரு போரில் — அதிலும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் — [illegible]

— இவ்வாறு கூறினார் ஹரி குணதிலக்கா. [உ-10]


யாழ். நகரில் ஒரு புதிய புடவை மாளிகை

# "எழிலி"

நாளை புதன்கிழமை
காலை 9.00 மணிமுதல் ஆரம்பம்

- கண்ணைக் கவரும் வர்ணத்தில் அமைந்த சிறந்த ரகச் சேலைகள், துணிவகைகள்.
- ஆடவர்களுக்கான சேட்டிங், சூட்டிங்.
- நவீன டிசைன்களில் அமைந்த தைக்கப்பட்ட ஆடைகள்.
- சிறுவர் குழந்தைகளுக்கான ஆடைகள்.
- இன்னும் பல.

★ சிறந்த ரகம்! ★ குறைந்த விலை!! ★ நிறைந்த சேவை!!!

உங்கள் தீபாவளிப் பண்டிகையை எழிலியுடன் பகிர்ந்துகொள்ள அன்புடன் அழைக்கின்றோம்.

பெரிய கடை,
யாழ்ப்பாணம்.
[22877]



# வெற்றிடம்

யாழ். நகரில் அமைந்துள்ள புடவைக் கடையொன்றிற்கு புடவை வாணிபத்தில் அனுபவமும் திறமையும் வாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பிக்க விரும்புவோர்கள் 19 - 10 - 92க்கு முன் பின்வரும் சான்றிதழ்களுடன் கீழ்க்காணும் முகவரிக்கு காலை 10 மணிக்கும், 12 மணிக்கும் இடையில் சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

1. பிறப்புச் சான்றிதழ்.
2. கல்விச் சான்றிதழ்.
3. வேலை முன் அனுபவச் சான்றிதழ்.

வருவாய்ப் பகுதிச் செயலகம்
யாழ். மாவட்டம்
பலாலி வீதி, கந்தர்மடம்
யாழ்ப்பாணம்.

[22878]



# அறிவித்தல்

St. John's Parish Nursery School Chundikuli.

1993 ஆம் ஆண்டு மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பப் படிவங்கள் 12- 10- 92 இலிருந்து வழங்கப்படுகின்றன என அறியத்தருகிறேன்.

[5380] — நிர்வாகி —



# மரண அறிவித்தல்

## சந்திரசேகரம்பிள்ளை நடராசா

[ஓய்வுபெற்ற நீர்ப்பாசன திணைக்கள பிரதம இலிகிதர்]

மாதகல் மேற்கைப் பிறப்பிடமாகவும் ஆனைப்பந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட சந்திரசேகரம்பிள்ளை நடராசா நேற்றுக் காலமானார். இவர் தெய்வானையின் அன்புக் கணவரும், சந்திரசேகரா [கனடா], சந்திரிகா [மருத்துவ பீட இறுதியாண்டு, யாழ். பல்கலைக்கழகம்], ஆனந்த சந்திரசேகரா [நோர்வே], தேவகி [கனடா], மனோகரி, அரசன் சந்திரசேகரா [கனடா], கௌரி, ராஜி ஆகியோரின் அன்புத் தந்தையும், சரவணமுத்து, சரஸ்வதி [ஆசிரியை, மாதகல் நுணசை மகாவித்தியாலயம்], லட்சுமி [ஆசிரியை, சந்திரோதய வித்தியாலயம் - உரும்பராய்], காலஞ்சென்ற சோமசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரரும்...

சிவராசா [ஆசிரியர்], கோபிநாத் [கனடா], மகேஸ்வரி [சுன்னாகம் ப நோ. கூ. சங்கம்] இராசமணி [இளைப்பாறிய ஆசிரியை], இராசம்மா, சண்முகம் [சீமெந்துக் கூட்டுத்தாபனம்], இராசதுரை [இளைப்பாறிய படவரைஞர்], செல்வரட்ணம் [பண்டத்தரிப்பு ப. நோ. கூ. சங்கம்] ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [13- 10- 92] பி. ப. 3. 00 மணிக்கு 235, பருத்தித்துறை வீதி ஆனைப்பந்தி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இத்தகவலை தயவுசெய்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நா. சண்முகம்
[மைத்துனர்]

235, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி.
[22879]


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 393/3, இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 13-10-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org